⇒ **நாடும் நகரமும்**

- நாடு என்ற சொல்லின் பொருள் மக்கள் வாழும் நிலம் என்பது ஆகும்.
- சிறந்த ஊர்கள் நகரமாகும். நாட்டின் தலைமைச் சான்ற நகரம் தலைநகரமாகும்.
- மூவேந்தர்களின் ஆட்சிக்கு உட்பட்ட தமிழ்நாட்டின் பகுதிகள் சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு எனப்பட்டன.
- சிறுபான்மையாக தனி ஊர்களும் 'நாடு' எனப்பட்டன.
- எடுத்துக்காட்டு:
- பொருநரையாற்றின் கரையில் உள்ள முரப்புநாடு அதன் மறுகரையில் உள்ள வல்லநாடு மாயவரத்தின் அருகில் உள்ள கொரநாடு (கூறைநாடு) பட்டுக்கோட்டை வட்டத்தில் உள்ள காணாடு மற்றும் மதுராந்தக வட்டத்தில் உள்ள தொன்னாடு.
- முன்னாளில் 'ஊர்' என்றும் 'பட்டி' என்றும் வழங்கப்பட்ட சில இடங்கள் பிற்காலத்தில் சிறப்புப் பெற்று நகரங்களாயின.
- நம்மாழ்வார் பிறந்த குருகூர் பின்னாளில் ஆழ்வார்திருநகர் ஆயிற்று.
- விருதுப்பட்டி, விருதுநகர் ஆயிற்று.
- சென்னையின் முக்கிய அங்கங்களாக விளங்கும் மயிலாப்பூரும், திருவல்லிக்கேணியும் அன்று கடற்கரை சிற்றூர்களாக விளங்கின.
- மயிலாப்பூரில் உள்ள பழமையான கபாலீச்சுரம் என்ற சிவாலயத்தை திருஞானசம்பந்தர் பாடியுள்ளார்.
- 'திருவல்லிக்கேணி' முதல் ஆழ்வார்களால் பாடப்பட்டது. அல்லி மலர்கள் நிறைந்த குளம் என்ற பொருளில் திருஅல்லிக்கேணி எனப்பட்டு திருவல்லிக்கேணி ஆயிற்று.
- 'புரம்' என்ற சொல், சிறந்த ஊர்களை குறிப்பதாகும். எடுத்துக்காட்டு காஞ்சிபுரம், பல்லவபுரம் (பல்லாவரம்) கங்கைகொண்ட சோழபுரம், தருமபுரம்.
- கடற்கரையில் உருவாகும் நகரங்கள் 'பட்டினம்' என பெயர் பெறும்.

**எடுத்துக்காட்டு:**

- காவிரிப்பூம்பட்டினம், நாகப்பட்டினம், காயல்பட்டினம், குலசேகரபட்டினம், சதுரங்கப்பட்டினம்.
- கடற்கரைச் சிற்றூர்கள் 'பாக்கம்' என பெயர் பெறும்.

**எடுத்துக்காட்டு:**

பட்டினப்பாக்கம், கோடம்பாக்கம் மீனம்பாக்கம், நுங்கம்பாக்கம், சேப்பாக்கம்.

- 'புலம்' என்பது நிலத்தைக் குறிக்கும்.
- எடுத்துக்காட்டு: மாம்புலம், தாமரைப்புலம், குரவைப்புலம்
- நெய்தல் நிலத்தில் அமைந்த வாழ்விடங்கள் 'குப்பம்' ஆகும்.

**எடுத்துக்காட்டு:**

நொச்சிக்குப்பம், மஞ்சக் குப்பம், மந்தாரக்குப்பம்.

⇒ **சேர, சோழ, பாண்டியரில் சேர்களே பழமையானவர்கள் என்பதை தொல்காப்பியம்**

**"போந்தை வேம்பே ஆரென வரூஉம்**

**மாபெருந் தானையர் மலைந்த பூவும்"**

– என்று குறிப்பிடுகிறது.



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- பண்டைய சேர நாடு என்பது இன்றைய கேரளப் பகுதிகளும், தமிழ்நாட்டின் சேலம், கோவை மாவட்டங்களின் பகுதிகளும் இணைந்ததாகும். சேலம், கோவைப் பகுதிகள் 'கொங்குநாடு' எனப்பட்டன.
- கொங்கு நாட்டின் எல்லைகளாக கொங்கு மண்டல 'சதகம்' என்ற நூலில் அதன் ஆசிரியர் கார்மேகக் கவிஞர் குறிப்பிடுவன. வடக்கு – பெரும்பாலை; தெற்கு – பழனி மலை மேற்கு – வெள்ளிமலை; கிழக்கு – மதிற்கரை கொங்கு நாட்டில் பாயும் ஆறுகள் காவிரி, பவானி, நொய்யல், ஆண் பொருநை எனப்படும் அமராவதி ஆகியவனவாகும்.

⇒ **<u>ஊரும் பேரும்</u>**

**1. குறிஞ்சி நில ஊர்கள்:**

- மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி நிலம் ஆகும்.
- ஓங்கியுயர்ந்த பகுதி மழை.
- மலையை விட சற்று உயரம் குறைந்த பகுதி குன்று.
- குன்றை விட சற்று உயரம் குறைந்த பகுதி கரடு அல்லது பாறை.
- மழையின் அருகே உள்ள ஊர்கள் நாகமலை, ஆனைமலை, சிறுமலை, திருவண்ணாமலை, விராலிமலை, வள்ளிமலை எனப்பட்டன.
- குன்றை அடுத்துள்ள ஊர்கள் குன்றூார், குன்றத்துார், குன்றக்குடி எனப்பட்டன.
- குன்றை விட குறைந்த நிலைப்பகுதி உள்ள ஊர்கள் சஞ்சீவிராயன், கரடு, பூம்பாறை, சிப்பிப்பாறை, மட்டப்பாறை, வால்பாறை, குட்டப்பாறை எனப்பட்டன.
- மலையைக் குறிக்கும் வடசொல் கிரி, சிவகிரி, கிருஷ்ணகிரி, நீலகிரி, கோத்தகிரி என்றும் மலையொட்டி நிலப்பகுதிகள் அழைக்கப்படுகின்றன.
- குறிஞ்சி நில மக்கள் புலம்பெயர்ந்த போதும் தாங்கள் சென்ற பகுதிக்கு ஆழ்வார்க்குறிச்சி, கல்லிடைக்குறிச்சி, கள்ளக்குறிச்சி, மொடக்குறிச்சி என பெயர் வைத்தனர்.
- 'குறிஞ்சி' என்ற பெயரே 'குறிச்சி' என மருவி வந்தது.

**2. முல்லை நில ஊர்கள்:**

- காடும் காடு சார்ந்த இடமும் முல்லை நிலப் பகுதி.
- முல்லை நில மக்கள் மரங்களின் பெயர்களையே ஊர்ப் பெயர்களாக சூட்டினர்.
- அத்தி (ஆர்) மரங்கள் சூழ்ந்த ஊர் ஆர்க்காடு.
- ஆலமரங்கள் நிறைந்த ஊர் –ஆலங்காடு.
- களாச்சடிகள் நிறைந்த பகுதி – களாக்காடு.
- மாமரங்கள் செழித்திருந்த பகுதி – மாங்காடு.
- பனை மரங்கள் நிறைந்த பகுதி – பனையபுரம்.
- காட்டின் நடுவே வாழ்ந்த மக்கள் விலங்குகளில் இருந்து தங்கள் பாதுகாப்பிற்காக வேலிக் கட்டிக் கொண்டனர். அவ்வூர்கள் பட்டி, பாடி எனப்பட்டன. ஆடு, மாடுகள் அடைக்கப்படும் இடம் 'பட்டி'எனப்படும்.

**எடுத்துக்காட்டு:**

- ஆட்டையாம்பட்டி, காளிப்பட்டி, கோவில்பட்டி, சிறுகூடல் பட்டி, சின்ன கொல்லம்பட்டி, பெரிய கொல்லம்பட்டி.

**3. மருத நில ஊர்கள்**

- வயலும் வயல் சார்ந்த இடமும் மருத நிலப்பகுதி.



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- மருத நில மக்கள் ஆற்றின் பெயரையும், ஆற்றின் கரையில் இருந்த மரங்களின் பெயரையும் ஊர் பெயர்களாக வழங்கி வந்தனர்.
- ‘ஆற்றூர்’ என்பது மருவி ஆத்தூர் எனப்பட்டது.
- கடம்ப மரங்கள் சூழ்ந்த பகுதி கடம்பூர்.
- தென்னை மரங்கள் சூழ்ந்த பகுதி தெங்கூர்.
- புளியமரங்கள் சூழ்ந்த பகுதி புளியங்குடி.
- குளம் –புளியங்குளம்
- ஏரி –வேப்பேரி, சீவலப்பேரி
- ஊருணி –சொக்கனூராணி, பேராவூரணி

**4. நெய்தல் நில ஊர்கள்**

- கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் நிலப்பகுதி.
- பரதவர்கள் வாழ்ந்த ஊர்கள் கீழக்கரை, கோடியக்கரை, நீலாங்கரை எனப்பட்டன.
- இக்காலத்தில் மீனவர்கள் வாழும் இடங்கள் ‘குப்பம்’ எனப்படுகின்றன.
- அரசும் ஊர்களும்.
- பெருவேந்தர்களும் குறுநில மன்னர்களும் அரணாக அமைத்த கோட்டை பெயர்கள் ஊர் பெயர்களாக வழங்கலாயிற்று.

**எடுத்துக்காட்டு:**

கந்தர்வகோட்டை, தேவகோட்டை, நாட்டரசன் கோட்டை, நிலக்கோட்டை, பட்டுக்கோட்டை, புதுக்கோட்டை.

⇒ **<u>திசையும் ஊர்களும்</u>**

- தம் ஊருக்கு கிழக்கே உள்ள ஊரை **‘கீழூர்’** என்றனர்.
- மேற்கே அமைந்துள்ள ஊரை **‘மேலூர்’** என்றனர்.
- தெற்கே அமைந்துள்ள ஊரை **‘தென்பழஞ்சி’** என்றனர்.
- வடக்கே அமைந்துள்ள ஊரை **‘வடபழஞ்சி’** என்றனர்.

⇒ **<u>பாளையங்கள்</u>**

- நாயக்க மன்னர்கள் தமிழகத்தை 72 பாளையங்களாகப் பிரித்தனர்.

**எடுத்துக்காட்டு :**

- ஆரப்பாளையம், இராசபாளையம், கணக்கம்பாளையம், குமாரபாளையம், கோபிச்செட்டிப்பாளையம், கோரிப்பாளையம், மேட்டுப்பாளையம் மற்றும் பிற.

⇒ **<u>மரூஉ</u>**

✓ மதிரை ➡ மருதை ➡ மதுரை
✓ கோவன்புத்தூர் ➡ கோயம்புத்தூர் ➡ கோவை
✓ **கரூர்:** இப்பகுதி ‘வஞ்சி நகரம்’ என அழைக்கப்பட்டது. கிரேக்க அறிஞர் தாலமி, கரூரை தமிழகத்தின் முதன்மையான உள்நாட்டு வணிக மையமாக குறிப்பிட்டுள்ளார்.

⇒ **<u>இலக்கியங்களில் தொன்மைத் தமிழக நகரங்கள்</u>**

| **இலக்கியம்** | **பாடல்** | **ஊர்** |
|---|---|---|
| சிலப்பதிகாரம் –காடும் கான் கதை | “வாழையும் கமுகும் தாழ்குலைத் தெங்கும் மாவும் பலாவும் சூழ் அடுத்து ஓங்கி | சிறுமலை (திண்டுக்கல் மாவட்டம்) |

| | | |
|---|---|---|
| | தென்னவன் சிறுமலை திகழ்ந்து தோன்றும்” | |
| அகநானூறு – 208 | “பல் பழுப் பலவின் பயங்கெழு கொல்லி” | கொல்லிமலை (நாமக்கல் மாவட்டம்) |
| அகநானூறு–93 | “கடும் பகட்டு யானை நெடுந்தேர்க் கோதை திருமா வியல் நகர்க் கருவூர் முன்துறை” | கரூர் (கரூர்) |
| ஐங்குறுநூறு | “கொற்கைக் கோமான் கொற்கையம் பெருந்துறை” | கொற்கை (தூத்துக்குடி மாவட்டம்) |
| சிலப்பதிகாரம் ஊர் காண் காதை | “ஓங்கு இரும் பரப்பின் வங்க ஈட்டத்து தொண்டியோர்” | தொண்டி (ராமநாதபுரம் மாவட்டம்) |
| புறநானூறு 118 | “கூர்வேல் குவைஇய மொய்ம்பின் தேர்வண் பாரிதண் பரம்பு நாடே” | பிரான்மலை (பறம்பு மலை) சிவகங்கை மாவட்டம் |
| மதுரைக்காஞ்சி 127 | “ஆலங்கானத்து அஞ்சு வர இறுத்து அரசுப்பட அமர் உழக்கி” | ஆலங்கானம் (திருவாரூர் மாவட்டம்) |

⇒ **<u>தூங்கா நகர்:</u>**

- சங்கம் வைத்து செந்தமிழ் வளர்த்த நகரம் மதுரை. மதுரை தமிழகத்தின் இரண்டாவது பெரிய நகரம் ஆகும்.
- உலகமே உறங்கிக் கொண்டிருக்கும் வேளையிலும் மக்கள் விழித்திருந்து வேலை செய்வதால், ‘தூங்கா நகர்’ எனப்படுகிறது.
- ஆண்டின் அனைத்து நாட்களிலும் ஏதாவது ஒரு விழா கொண்டாடுபடுவதால் ‘மதுரை திருவிழா நகர்’ எனப்படுகிறது.
- நாற்றிசையிலும் கலையழகு பொருந்திய மாபெருங் கோபுரங்களோடு எட்டு சிறிய கோபுரங்களையும் கொண்டு, எழில்மிகு சிற்பக் கலைக்கூடமாக விளங்குவதால் ‘கோயில் மாநகர்’ எனப்படுகிறது.
- பழம்பெரும் தமிழர்தம் நாகரிகத் தொட்டிலாகத் திகழ்ந்ததால் **தென்னிந்தியாவின்–ஏதென்ஸ்** எனப்படுகிறது.
- மதுரை என்றால் ‘இனிமை’ என்பது பொருளாகும். தமிழும், மதுரையும் இனிமையின் இயல்பால் அமைந்தவை.
- மதுரையை புறநானூறு ‘தமிழ் கெழுக்கூடல்’ எனக் கூறுகிறது.

⇒ **<u>தமிழகத்தின் சிறப்பை உணர்த்தும் சொற்றொடர்:</u>**

- “சேரநாடு வேழமுடைத்து, சோழநாடு சோறுடைத்து, பாண்டியநாடு முத்துடைத்து, தொண்டை நாடு சான்றோர் உடைத்து”.
- “தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின் மகிழ்நனை மருகின் மதுரை”

**– நல்லூர் நத்தத்தனார் சிறுவாற்றுப்படையில் பாடியது.**

⇒ **<u>இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் மதுரைக்கு சூட்டிய புகழ் மாலைகள்:</u>**

- "ஓங்கு சீர் மதுரை", 'மதுரை மூதூர் மாநகர்', 'தென்தமிழ் நன்னாட்டுத் தீது தீர் மதுரை'
- 'மாண்புடை மரபின் மதுரை', 'வானவர் உறையும் மதுரை', 'பதியெழுவறியாப் பண்பு மேம்பட்ட மதுரை மூதூர்'.
- கி.பி. 2–ம் நூற்றாண்டில் எழுந்த சிலப்பதிகாரமே 'மதுரை மூதூர்' எனக் குறிப்பிடுவதால் மதுரையின் பழமை பெறப்படும்.
- மதுரைக்கும் 'கூடல்' எனவும், 'ஆலவாய்' என்றும் வேறு பெயர்கள் வழங்கப்படுகின்றன.

⇒ **<u>நான்மாடக் கூடல்:</u>**

- திருவாலவாய், திருநள்ளாறு, திருமுடங்கை, திருநடுவூர் ஆகிய நான்கு திருக்கோயில்கள் சேர்ந்தமையால் 'நான்மாடக்கூடல்' என வழங்கலாயிற்று எனவும், கன்னிக்கோயில் கரியமால் கோயில், காளிக்கோயில், ஆலவாய்க்கோயில் ஆகிய நான்கு கோயில்களும் மதுரைக்கு காவலாக அமைந்தமையால் நான்மாடக்கூடல் என வழங்கலாயிற்று எனவும் கூறுவர்.
- பாண்டிய மன்னன் வேண்டுதலுக்கு ஏற்ப, வருணனிடமிருந்து மதுரையைக் காக்க இறைவன் அனுப்பிய நான்கு மேகங்களும், நான்கு மாடங்களாகக் கூடி மதுரையைக் காத்தமையால் நான்மாடக்கூடல் ஆயிற்று என பரஞ்சோதியார் கூறியுள்ளார்.
- சங்கம் வைத்து செந்தமிழை வளர்க்க புலவர் அனைவரும் கூடியதால் 'கூடல்' என பெயர் பெற்றது. எந்நாட்டவரும், எவ்வூரினரும் வந்து கூடும் வளமான நகர் என்பதனால் கூடல் என்றும் பெயர் பெற்றது எனக் கூறுவர்.

⇒ **<u>ஆலவாய்:</u>**

- மதுரையின் எல்லையை வரையறுத்துத் தருமாறு பாண்டியன் இறைவனிடம் கேட்க, இறைவன் தன் கையணியான பாம்பிடம் எல்லை வரையறுக்க ஆணையிட்டார். பாம்பு தன் உடலை வளைத்து எல்லையை வரையறுத்துக் காட்டியதால் 'ஆலவாய்' என்ற பெயர் வந்ததாக திருவிளையாடற் புராணம் கூறுகிறது. ஆலவாய் ஆலம் – விடம். விடத்தை வாயில் கொண்டுள்ள பாம்பினைக் குறிக்கும்.
- மதுரையில் எழுந்தருளியுள்ள ஈசன் ஆலமர நிழலில் வீற்றிருந்ததனால் ஆலவாய் எனப் பெயர் பெற்றதாகவும் கூறுவர்.

| | | |
|---|---|---|
| முதற்சங்கம் | தென்மதுரை | கடற்கோளால் அழிந்தது |
| இடைச் சங்கம் | கபாடபுரம் | கடற்கோளால் அழிந்தது |
| கடைச்சங்கம் | இன்றைய மதுரை | |

- மருத மரங்கள் அடர்ந்த பகுதியாக இருந்தமையால் 'மருதை' என வழங்கப்பட்டு, காலப்போக்கில் 'மதுரை' என்றானது என்கின்றனர். கல்வெட்டுகளில் மதுரை என்ற பெயர் காணப்படுகிறது.

⇒ **<u>சங்க கால மதுரையின் நகர அமைப்பு:</u>**

- சங்ககால மதுரை, வைகை ஆற்றங்கரையில் அமைந்திருந்தது. மதுரையின் வாயிலானது போர்வீரன் ஒருவன் யானை மீது உட்கார்ந்து, தன் கையில் மிக உயர்ந்த வெற்றிக் கொடியை ஏந்திச் செல்லும் அளவிற்கு குன்றினைக் குடைந்தார் போல் இருந்தது.

- பாம்பென நெளிந்து செல்லும் பொறிகளையுடைய பெருமதிலும் அதனைச் சுற்றி ஆழமான அகழியும் இருந்துள்ளன.
- யானை கூட்டங்கள் அகழிக்கு போவதற்கு ஏற்ப சுருங்கை (சுரங்க வழியும்) இருந்தது.
- நகரின் நடுவே அமைந்துள்ள அண்ணல் கோயிலும் அதனைச் சுற்றி முறையாக அமைந்திருந்த தெருக்களும், தாமரை மலரும் அதனைச் சுற்றியுள்ள அடுக்கடுக்கான இதழ்களையும் போல காட்சியளித்தன.
- மேலும் அறங்கூறு அவையம், அம்பலங்கள், மன்றங்கள், அறக்கூழ்ச் சாலைகள், நாளங்காடி, அல்லங்காடி முதலியன இருந்தன.

**"மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்**

**பூவோடு புரையுஞ் சீரூர் பூவில்**

**இதழகத் தனைய தெருவம் இதழகத்து**

**அரும்பொகுட் டனைத்தே அண்ணல் கோயில்**

என்னும் பரிபாடல் அடிகள் வர்ணித்தது போலவே இன்றும் கோயிலும், தெருக்களும் அவ்வாறே காணப்படுகின்றன".

⇒ **மதுரையில் வாழ்ந்த புலவர்கள்**

- கணக்காயனார் மகனார் நக்கீரனார்
- குமரனார்
- நல்லந்துவனார்
- மருதனிள நாகனார்
- இளந்திருமாறன்
- சீத்தலைச் சாத்தனார்
- பெருங்கொல்லனார்
- கண்ணகனார்
- கதங்கண்ணாகனார்
- சேந்தம்பூதனார்
- மாணிக்கவாசகர் முதலியார்.

⇒ **மதுரை வீதிகளின் பெயர்**

| | |
|---|---|
| **1. அறுவை வீதி** | ஆடைகள் விற்கும் கடைவீதி |
| **2.கூல வீதி** | தானியக்கடை வீதி |
| **3.பொன் வீதி** | பொற்கடல் வீதி |
| **4.மன்னவர் வீதி** | மன்னர் வாழும் வீதி |
| **5.மறையவர் வீதி** | அந்தணர் வீதி |

⇒ **மதுரையின் மாண்புகள்**

- சிவபெருமான் சுந்தரபாண்டியன் ஆகவும், செவ்வேள் உக்கிரப் பாண்டியனாகவும் தோன்றி, மதுரையை ஆட்சி செய்துள்ளார்.
- உமையம்மை மலையத்துவசனுக்கு மகளாகத் தோன்றி, தடாகை பிராட்டியர் என்ற பெயரில் மதுரை ஆட்சி செய்துள்ளார்.
- மாணிக்கவாசகர் அரிமர்த்தன பாண்டியனுக்கு அமைச்சராகத் திகழ்ந்தார்.
- கூன்பாண்டியன் காலத்தில் மங்கையர்கரசியார், குலச்சிறையார் உதவியுடன் திருஞானசம்பந்தர் சைவத்தைக் காத்தார்.
- பாண்டிய மன்னர்களுள் பலர் புலவர்களாகவும் விளங்கினர். அவர்களுள் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், வரகுண பாண்டியன், அதிவீரராம பாண்டியர் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- மதுரையிலுள்ள மீனாட்சி அம்மன் கோயிலில் பொற்றாமரைக் குளம் உள்ளது. ஆயிரம் கால் மண்டபமும் அமைந்துள்ளது.
- மீனாட்சியம்மன் கோயிலின் நான்கு கோபுரங்களில், பழமையானது கிழக்கு கோபுரமாகும். இது 160.9 அடி உயரமும் 1511 சுதை உருவங்களும் உடையது.

⇒ **திருமலை நாயக்கர் மதுரைக்குச் செய்த சிறப்புகள்**

- மதுரையைத் தலைநகராகக் கொண்டு மன்னர் திருமலை நாயக்கர் ஆட்சி செய்தார்.
- கலைநயமிக்க நகரமாக மதுரை அமைத்தார். சிற்பங்கள் மிக்க புதுமண்டபம், கோடை விடுதியான தமுக்கம், பெரிய தெப்பக்குளம் போன்றவை இவரால் கட்டப்பட்டது.
- கலைநயத்தில் தாஜ்மஹாலை ஒத்த திருமலை நாயக்கர் மகாலையும் கட்டினார். மரமே பயன்படுத்தாமல் கட்டப்பட்டது இந்த மகால். இங்குள்ள ஒவ்வொரு துானும் 82 அடி உயரமும் 19 அடி சுற்றளவும் கொண்டது.
- மதுரையில் நடைபெறும் சித்திரைத் திருவிழாவை பன்னாட்டு மக்களும் வந்து பார்த்து மகிழுமாறு சிறப்புற நடத்தினார்.
- ராணி மங்கம்மாள் அமைத்த சத்திரங்களும், சாலைகளும் மதுரைக்கு இன்றும் பெருமை சேர்க்கின்றன.

⇒ **முக்கிய நிகழ்வுகள்**

- பரஞ்சோதியாரின் திருவிளையாடல் புராணம் தருமிக்கு இறைவன் தண்டமிழ்ப் பாடல் எழுதி தந்தமைப் பற்றி கூறுகிறது.
- மீனாட்சியம்மையே சிறுமியாக வந்து முத்து மணி மாலையை குமரகுருபரருக்கு பரிசளித்தது. மதுரையை சுற்றியுள்ள மலைகளில் வாழ்ந்த சமண முனிவர்களால் நாலடியார் இயற்றப்பட்டது. வள்ளல் பாண்டித்துரையார் மதுரையில் நான்காம் தமிழ் சங்கத்தை நிறுவி வளர்த்தார்.
- ஆயிரங்கால் மண்டபம், அட்டசத்தி மண்டபம், புதுமண்டபம், நகராமண்டபம் என்பன இந்நகருக்கு அணி சேர்ப்பன.
- சிலப்பதிகாரக் காப்பிய தலைவன் கோவலன் கொலைக்களப்பட்ட இடம் ‘கோவலன் பொட்டல்’ என வழங்கப்படுகிறது.
- கீழவாசல், மேலவாசல், தெற்கு வாசல், வடக்கு வாசல் என வழங்கபடுமிடங்கள் கோட்டையின் மதில் வாயில்கள் இருந்த இடங்களாக அறியப்படுகின்றன.
- கையில் சிலம்புடன் உட்கார்ந்து இருக்கும் பெண் உருவச் சிலை அமைந்த கோயில் ‘செல்லத்தம்மன்’ கோயில் என்று வழங்கப்படுகிறது.

⇒ **திருநெல்வேலி**

✓ **சிறப்புகள்:**

பாண்டியர்களின் இரண்டாவது தலைநகரமாக விளங்கியது இந்நகரம். இந்நகரத்தைச் சுற்றி நெல் வயல்கள் வேலி போல் இருந்ததால் திருநெல்வேலி என பெயர் பெற்றது.

⇒ **திருநெல்வேலி குறித்து இலக்கியங்கள்:**

| பாராட்டுரை | நூல் | ஆசிரியர் |
|---|---|---|
| **“திக்கெல்லாம் புகழுறும் திருநெல்வேலி”** | தேவாரம் | திருஞான சம்பந்தர் |
| **“தண் பொருநைப் புனல் நாடு”** | பெரிய புராணம் | சேக்கிழார் |
| **“பொதியி லாயினும் இமய மாயினும் பதியெழு அறியாப் பழங்குடி”** | சிலப் – பதிகாரம் | இளங் – கோவடிகள் |
| **“வானரங்கள் கனி கொடுத்து மந்தியோடு கொஞ்சும் மந்திசிந்து** | குற்றாக் குறவஞ் சி | திரிகூட ராசப்பக் கவிராயர் |

| | | |
|---|---|---|
| **கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்" – (குற்றாலம் மழையின் சிறப்பு)** | | |
| **"முத்துப்படு பரப்பிற் கொற்கை முன்றுறை"** | நற்றிணை | கணக் காயனார் |
| **"கொற்கையில் பெருந்துறை முத்து"** | அக நானூறு | மதுரை கணக்காய னார் |
| **"திங்கள் நாள் விழா மல்கு திருநெல் வேலியுறை செல்வர் தாமே"** | தேவாரம் | திருஞான சம்பந்தர் |

**தாமிரபரணி ஆறு**

- இந்த ஆறு திருநெல்வேலியின் வளத்திற்கு காரணமாக உள்ளது. தொன்மைக் காலத்தில் **'தன் பொருநை நதி'** என்று அழைக்கப்பட்டது.
- இது பச்சையாறு, மணிமுத்தாறு, சிற்றாறு, காரையாறு, சேர்வலாறு, கடனாநதி எனப் பல கிளைகளாக பிரிந்து திருநெல்வேலி மாவட்டத்தைச் செழிக்கச் செய்கிறது.
- முற்காலத்தில், திருநெல்வேலி 'வேணுவனம்' என்று அழைக்கப்பட்டது. இதன் பொருள் **'மூங்கில் காடு'** ஆகும். இங்கு **'மூங்கில் நெல்'** அதிகமாக விளைந்தமையால் இப்பெயர் ஏற்பட்டது.

⇒ **<u>கொற்கைத் துறைமுகம்:</u>**

- தாமிரபரணி ஆறு கடலோடு கலக்கும் இடத்தில் 'கொற்கை' என்னும் துறைமுகம் இருந்தது. இங்கு முத்துக் குளித்தல் சிறப்பாக நடைபெற்றது என தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. கொற்கையில் விளைந்த பாண்டி நாட்டு முத்துக்கள் உலகப் புகழ் பெற்றவை.

⇒ **<u>நகரமைப்பு:</u>**

- நகரின் நடுவே நெல்லையப்பர் கோயில் அமைந்துள்ளது. கோயிலைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் மாட வீதிகளும், அவற்றை சுற்றி தேரோடும் வீதிகளும் அமைந்துள்ளன.

⇒ **<u>காவற்புரைத் தெரு:</u>**

- காவற்புரைத் தெரு என்று அழைக்கப்படும் தெரு பழைமைக்குச் சான்றாக உள்ளது. காவற்புரை என்றால் 'சிறைச்சாலை' என்பது பொருளாகும்.
- அரசரால் தண்டிக்கப்பட்டவர்கள் இங்கு சிறை வைக்கப்பட்டதால் இப்பெயர் பெற்றது.
- இங்கு தானியங்கள் விற்பனை செய்யப்படும் 'கூலக்கடை தெரு' என்ற பழமையான தெரு உள்ளது.
- முற்காலத்தில் பொன் நாணயங்களை உருவாக்கும் பணியாளர்கள் வாழ்ந்த இடம் அக்கச்சாலை எனப்படும். தொன்மை வாய்ந்த அக்கச்சாலை தெரு ஒன்று இந்நகரில் உள்ளது.
- முற்காலத்தில் வணிகம் நடைபெறும் பகுதி பேட்டை எனப்படும். நெல்லை நகரின் மேற்கே அமைந்துள்ள பேட்டை என்ற இடம் முன்பு பெரும் வணிகம் நடைபெற்ற இடம் ஆகும்.

⇒ **<u>பாண்டியபுரம்:</u>**

பாண்டிய மன்னன் நின்றசீர் நெடுமாறனை நெல்லை மக்கள் எதிர்கொண்டு வரவேற்ற இடம் ஆகும்.

⇒ **<u>திருமங்கை நகர்:</u>**

நின்றசீர் நெடுமாறனின் மனைவியாகிய மங்கையர்க்கரசியை நெல்லை மக்கள் எதிர்கொண்டு வரவேற்ற இடமாகும்.

⇒ **<u>வீரராகவபுரம் மற்றும் மீனாட்சிபுரம்:</u>**

நாயக்க மன்னரின் தளவாயாக விளங்கிய அரியநாயகரின் வழித்தோன்றல் வீரராகவர் மற்றும் அவரது துணைவியார் மீனாட்சி அம்மையார் பெயரில் அமைந்துள்ளது.

⇒ **பண்டைய வரலாற்றை நினைவூட்டும் ஊர்கள்:**

சேரன்மாதேவி, கங்கைகொண்டான், திருமலையப்புரம், வீரபாண்டியப்பட்டினம், குலசேகரன் பட்டினம்.

⇒ **கோட்டைகள் இருந்த நகரங்கள்:**

பாளையங்கோட்டை, உக்கிரன் கோட்டை, செங்கோட்டை

⇒ **இரட்டை நகரங்கள்:**

- தாமிரபரணி ஆற்றின் மேற்கு கரையில் திருநெல்வேலியும், கிழக்குக்கரையில் பாளையங்கோட்டையும் அமைந்துள்ளன.
- இவ்விரு நகரங்களும் இரட்டை நகரங்கள் எனப்படுகின்றன.

⇒ **தென்னிந்தியாவின் ஆக்ஸ்போர்ட்:**

- பாளையங்கோட்டையில் அதிகளவு கல்வி நிலையங்கள் இருப்பதால் இந்நகரம் **தென்னிந்தியாவின் ஆக்ஸ்போர்ட்** எனப்படுகிறது.

⇒ **திருநெல்வேலியில் வாழ்ந்த புலவர்கள்:**

- மாறோக்கத்து நப்பசலையார்
- நம்மாழ்வார்
- பெரிய ஆழ்வார்
- குமரகுருபரர்
- திரிகூடராசப்பக் கவிராயர்
- கவிராசப் பண்டிதர்
- கடிகை முத்துப் புலவர்
- உமறுப்புலவர்
- பாரதியார்

⇒ **திருநெல்வேலியில் வாழ்ந்து தமிழ் தொண்டாற்றிய அறிஞர்கள்:**

- வீரமாமுனிவர்
- கால்டுவெல்
- ஜி.யு.போப்
- தமிழ் மொழியை வளர்த்த **அகத்தியர்** பொதிகை மலையில் வாழ்ந்தார் என்பர்.
- திருநெல்வேலிக்கு அருகில் உள்ள ஆதிச்சநல்லூர் என்னும் இடத்தில் நிகழ்த்தப்பட்ட அகழாய்வில், இறந்தவர்களின் உடல்களை புதைக்க, பழந்தமிழர்கள் பயன்படுத்திய முதுமக்கள் தாழிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மேலும் தமிழரின் தொன்மைக்கும், நாகரிகச் சிறப்புக்கும், சான்றாக விளங்கும் தொல்பொருள்கள் இங்கு கிடைத்துள்ளன. இவ்வூர் தற்போது தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ளது.

⇒ **திருநெல்வேலிச் சீமையும் கவிகளும்**

⇒ **ஆசிரியர் குறிப்பு:**

| | |
|---|---|
| **பெயர்** | பி.கே.சிதம்பரநாதர் (டி.கே.சி) |
| **சிறப்பு பெயர்** | இரசிகமணி |
| **பணி** | வழக்கறிஞர், திறனாய்வாளர், எழுத்தாளர் |

- இவர் தமது வீட்டில் வட்டத் தொட்டி என்னும் பெயரில் இலக்கியக் கூட்டங்களை நடத்தி வந்தார். கடித இலக்கியத்தின் முன்னோடி, தமிழிசை காவலர், வளர்தமிழ் ஆர்வலர், குற்றால முனிவர் என்று புகழப்படுகிறார்



www.tnpscgroup4.in

- டி.கே. சிதம்பரனார் எழுதிய ‘இதய ஒலி’ என்ற நூலில் திருநெல்வேலி சீமையும், கவிகளும் என்ற பகுதியில் அமைந்துள்ளது.
- பாரதியார் பிறந்து வளர்ந்த இடம் எட்டையபுரமாகும்.
- தேசிக விநாயகனார் நாஞ்சில் நாட்டில் (கன்னியாகுமரிக்கு அருகில்) பிறந்து வளர்ந்தவராய் இருப்பினும் அவர் தமிழ் கற்ற இடம் திருநெல்வேலி ஆகும்.

⇒ **கடிகைமுத்துப் புலவர்:**

- எட்டயபுரத்தில் 200 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர். அவர் வெங்கடேசுர எட்டப்ப ராஜாவைப் பற்றிய பல பாடல்களைப் பாடியுள்ளார்.

⇒ **பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்:**

- மதுரையில் இருந்து நெல்லை வந்தவர். நெல்லைப்பர் கோவிலில் எழுந்தருளியுள்ள காந்திமதி தாயாரை தரிசனம் செய்து, இயற்றிய பாடல்களில் உரிமையுடன் சுவாமியிடம் சிபாரிசு செய்ய வேண்டும் என்கிறார்.

⇒ **பிள்ளை பெருமாள்**

- ஸ்ரீ வைகுண்டத்துப் பெருமாளைப் பற்றிப் பாடியுள்ளார். திருநெல்வேலியில் இருந்து திருச்செந்தூர் செல்லும் வழியில் 18– வது மைலில் ஆற்றின் வடகரையில் ஸ்ரீவைகுண்டம் அமைந்துள்ளது.
- ஆற்றின் தென்கரையில் நம்மாழ்வார் அவதரித்த ஆழ்வார் திருநகரி உள்ளது. இந்த ஊர் தொன்மைக்காலத்தில் திருக்குருகூர் என்று அழைக்கப்பட்டது.
- முத்தொள்ளாயிரம் என்ற நூலின் ஆசிரியர் பெயர் இன்றளவும் அறியப்படவில்லை. அவர் 2000 ஆண்டுகளுக்கு முன்பு கொற்கை என்ற ஊரில் வாழ்ந்து வந்தவர். மேற்கே ரோமாபுரி, கிரேக்க தேசம் முதல் கிழக்கே சைனா வரை கொற்கையிலிருந்து முத்து ஏற்றுமதி செய்யப்பட்டதை அவர் தனது பாடல்களில் பாடியுள்ளார்.
- **வள்ளல் சீதக்காதி** என்பவர் 250 ஆண்டுகளுக்கு முன்னர் **காயல்பட்டினத்தில்** வாழ்ந்து வந்தார்.அவர் மிகப்பெரும் வணிகர். அவருடைய கப்பல்கள் பல தேசங்களுக்கும் சென்று வர்த்தகம் செய்து வந்தன. அதன் மூலம் கிடைத்த செல்வங்களைக் கொண்டு தமிழ்ப் புலவர்களை அவர் ஆதரித்து வந்தார். அவர் இறந்தவுடன் புலவர்கள் ஆற்றாமையால் துடித்தனர்.

**எடுத்துக்காட்டு**

**“பூமாது இருந்தென் புவிமாது இருந்தென் இப்பூதலத்தில்**

**நாமாது இருந்தென்ன நாமும் இருந்தென்ன நாவலர்க்குக்**

**கோமான் அழகமர் மால்சீதக் காதி கொடைக்கரத்துச்**

**சீமான் இறந்திட்ட போதே புலமையும் செத்ததுவே!”**

**– நமச்சிவாய புலவர்**

- திருப்புகழைப் பாடிய அருணகிரிநாதர் திருச்செந்தூரில் உள்ள நந்தவனங்களைப் பார்த்து மகிழ்ந்து பாடல்களை இயற்றியுள்ளார். நந்தவனங்களில் ஏரி நீர் கட்டிக் கிடப்பதால் அங்கு துள்ளி குதித்த சேல் மீன்கள் பூச்செடிகளை அழிக்கத் தலைப்பட்டன என்று பாடியுள்ளார். கழுகுமலையில் எழுந்தருளியுள்ள முருகன்



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

மேல் காவடிப் பாட்டுகளே அதிகமாகப் பாடப்பட்டு உள்ளன.

- இப்பாடல்கள் காவடிச்சிந்து என்றும் அழைக்கப்படுகின்றன. காவடிச்சிந்துப் பாடியவர் அண்ணாமலையார். காவடிப்பாட்டை பாடும்போது பம்பை, மேளம் போன்ற இசைக்கருவிகள் இசைக்கப்படுகின்றன.
- சங்கரன்கோயிலில் மிகப் பெரிய சிவஸ்தலம் உள்ளது. அக்கோயிலில் எழுந்தருளியுள்ள கோமதித் தாயாரைப் பற்றிய திருநெல்வேலி அழகிய சொக்கநாதர் என்ற புலவர் பாடியுள்ளார்.

**"வாடா' என அழைத்து வாழ்வித்தால் அம்ம**
**உனைக் கூடாதென் றார் தடுப்பார்**
**கோமதித்தாய் ஈஸ்வரியே!"**

**–அழகிய சொக்கநாதர்**

- சங்கரன்கோவிலில் இருந்து வடக்கே எட்டுமைல் தொலைவில் கருவைநல்லூர் என்ற ஸ்தலம் உள்ளது. கரிவலம் வந்த நல்லூர் என்று இந்த ஊர் அழைக்கப்படுகிறது. இந்தக் கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவன் மீது திருக்கருவை வெண்பா அந்தாதி, திருக்கருவை பதிற்றுப்பந்தாதி, திருக்கருவை கழித்துறை அந்தாதி என்ற நூல்களை மன்னர் அதிவீரராமபாண்டியர் இயற்றியுள்ளார்.
- அழகிய குற்றால மழை குறித்து 1300 வருடங்களுக்கு முன்னால் வந்த திருஞானசம்பந்தர் நுண்துளி தூங்கும் குற்றாலம் என்றும் பாடியுள்ளார்.
- குற்றால மழை குறித்து மாணிக்கவாசகர் பாடிய பாடல்,

**உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன்**
**பேர்வேண்டேன்**

**கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனி**
**அமையும்**

**குற்றாலத் துறைகின்ற கூத்தாஉன் குரை**
**கழற்கே**

**கற்றாவின் மனம்போலக் கசிந்துருக**
**வேண்டுவனே!**

- குற்றாலத்திற்குக் கிழக்கே இரண்டு மைல் தொலைவில் உள்ள மேலகரத்தில் வாழ்ந்து வந்த திரிகூடராசப்பக் கவிராயர் குற்றால மழை குறித்து குறி சொல்லும் பெண் பாடுவதாக இயற்றிய பாடல்,

**கயிலை என்னும் வடமலைக்குத் தெற்கு**
**மலை அம்மே!**

**கனகமகா மேருவென நிற்கும்மலை அம்மே!**

**துயிலும் அவர் விழிப்பாகி அகிலம் எங்கும்**
**தேடும்**

**துங்கர்திரி கூடமலை எங்கள் மலை**
**அம்மே!**

**குறிப்பு:**
இக்கட்டுரை 70 ஆண்டுகளுக்கு முன் டி.கே.சி அவர்களால் எழுதப்பட்டது.

⇒ **<u>தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களும்</u>**

- தமிழகத்தை சேர, சோழ, பாண்டியர்களுக்கு உரியதாக கூறுகின்றனர்.
- "வன்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு" என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.
- மூவேந்தர்களின் காலத்தை வரையறுத்து கூற இயலவில்லை. ஏனெனில், வால்மீகி ராமாயணம், மகாபாரதம், அர்த்த சாஸ்திரம், அசோக கல்வெட்டு ஆகியவற்றில்

மூவேந்தர்கள் குறித்த செய்திகள் இடம் பெற்றுள்ளன. எனவே அவர்கள் பன்னெடுங்காலத்திற்கு முற்பட்டவர்கள் என்பதை அறிய முடிகிறது.

- மூவேந்தர்களுள் சேரர்களை பழமையானவர்கள் என்பதை சேர, சோழ, பாண்டியர் எனும் தொடர் உணர்த்துகிறது.

**“போந்தை வேம்பே ஆரென வரூஉம்**

**மாபெருந் தானையர் மலைந்த பூவும்”**

என்ற தொல்காப்பிய அடிகள் சேரரை முன் வைத்துள்ளது.

⇒ **சேரர்களின் நாடு**

- இது குடநாடு எனப்பட்டது. இவர்களின் தலைநகராக வஞ்சி விளங்கியது. மேற்கு மலைத்தொடரில் இந்நகர் தோன்றி அரபிக் கடலில் கலக்கும் பேரியாற்றங்கரையில் இருந்தது. இந்நகரை கருவூர் என்றும் அழைப்பர். தொண்டி, முசிறி, காந்தலூர் ஆகியவை சேர நாட்டின் துறைமுக பட்டினங்களாகும். சேரர்களின் கொடி விற்கொடி. சேரர்களுக்குரிய பூ பனம்பூ ஆகும்.

⇒ **சேர நாட்டின் எல்லைகள்**

- பண்டைய சேர நாடு என்பது இன்றைய கேரள பகுதிகளும், தமிழ்நாட்டின் சேலம், கோவை, மாவட்டங்களின் இணைந்த பகுதியாக விளங்கியது. சேலம், கோவை பகுதிகள் கொங்கு நாடு என்று அழைக்கப்பட்டன. இப்பகுதிகளை சேரர்களின் உறவினர்கள் ஆட்சி செய்தனர்.

⇒ **கொங்கு மண்டலம்**

- கொங்கு மண்டலத்தின் எல்லைகளாக கார்மேக கவிஞர் இயற்றிய ‘கொங்கு மண்டல சதகம்’ என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது அவை:

| | |
|---|---|
| வடக்கு | பெரும்பாலை |
| தெற்கு | பழனி மலை |
| கிழக்கு | மதுர்கரை |
| மேற்கு | வெள்ளிமலை |

⇒ **கொங்கு மண்டலத்தில் அடங்கி இருந்த பகுதிகளின் தற்போதைய பெயர்**

- நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, நாமக்கல், திண்டுக்கல், சேலம், கரூர்.

⇒ **கொங்கு மண்டலத்தை வளமாக்கிய நதிகள்**

- காவிரி, பவானி, நொய்யல், ஆன்பொருநை எனப்படும் அமராவதி.

⇒ **மலை இடப்பெயர்கள்**

- திராவிடர் அடிப்படையில் மலைவாழ் மக்கள் திராவிடர்களை மழை நில மனிதர்கள் என்று கமிழ்சுவலபில் குறிப்பிடுகிறார்.
- இந்தியாவின் வடக்கு, மேற்கு, கிழக்கு மாநில இடப்பெயர்களில் திராவிட இடச் சொற்களின் நேரடி தொடர்பு இன்று வரை நீடிக்கிறது.

⇒ **வடமேற்கு இந்தியாவில் திராவிட மழைப்பெயர்கள்:**

- சமஸ்கிருத மொழியில் ‘மலய’ என்று வழங்கப்படுகிறது. வடமொழியில் மலய என்ற சொல் மலபாருக்கு மேற்கே உள்ள மலைகளைக் குறிக்கிறது. ‘மலயத்துவஜ பாண்டியன்’ என்ற மன்னனின் பெயர் ‘மலய’ என்ற சொல்லின் திராவிட தொடர்புக்கு அரண் சேர்க்கிறது.

⇒ **மலை குடியிருப்புகள்:**

- நீலகிரியில் உள்ள ‘தோடர்’ இனத்தவர் பால் எருமை கொட்டில்களைப் புனிதமாக

கருதுபவர்கள். எனவே அவற்றைச் சுற்றி உயர்ந்த மதிற்சுவர்களை எழுப்பி உள்ளனர்.

- குறும்பர் மொழியில் தாழ்வாரத்தைக் குறிக்கும் சொல் மெட்டு.
- ஆந்திராவிலும், ஒடிசாவிலும் உள்ள 'ஜதாப்பு' எனப்படும் திராவிட பழங்குடியினரின் குடியிருப்புகள் மலை உச்சிகளில் அமைந்துள்ளன.

⇒ **தென்னிந்தியாவில் மலை என்ற இடப்பெயரின் சிறப்பிடம்:**

- தமிழ்நாட்டில் மட்டும் 'மலை' என்ற சொல் 17 இடப்பெயர்களில் முன்னொட்டாகவும் 84 இடப்பெயர்களில் பின்னொட்டகவும் அமைந்துள்ளன.
- ஆந்திர மாநிலத்தில் மல் என்ற வேர்ச்சொல் ஐகார ஈற்றிர்க்குப் பதிலாக ஆகார ஈறு பெற்று 'மலா' என்று வழங்கப்படுகிறது.
- கர்நாடகாவில் மலே என்ற சொல் 15 இடப்பெயர்களிலும், 'மலை' என்ற சொல் ஒரு இடத்திலும் (தோணிமலை) இடம்பெறுகிறது.
- கேரளா மாநிலத்தில் 10 இடங்களில் 'மலை விகுதி பெயராக' அமைந்துள்ளன.

⇒ **மலை என்ற சொல்லை அடிப்படையாகக் கொண்ட இன பெயர்கள்:**

| | |
|---|---|
| 1. மால் பஹாடியா | ஜார்கண்ட் |
| 2. மல அரயன் | மேற்கு தொடர்ச்சி மலைகள்– கேரளம் |
| 3. மல குறவன் | நெடுமங்காடு – கேரளம் |
| 4. மல மூத்தன் | எர்நாட் – கேரளம் |
| 5. மல பணிக்கர் | வட கேரளம் |
| 6. மலயன் | பாலக்காடு – கேரளம் |
| 7. மலவேடா | இடுக்கி – கேரளம் |
| 8. மலேரு | தட்சிண கன்னடா – கர்நாடகம் |
| 9. கோட்டா | நீலகிரி – தமிழ்நாடு |
| 10. கொண்டாதோரா | ஆந்திரப்பிரதேசம் |
| 11. கோண்டு, கொய்ட்டெர் | ஒடிஸா |

⇒ **மலை என்ற சொல் வழங்கப்படும் இடங்கள்**

- உத்திராஞ்சல் – சமோலி,
- ஜார்கண்ட்– கும்லா,
- உத்தரப்பிரதேசம் – ஜவன்பூர்

⇒ **வரை என்ற சொல் வழங்கப்படும் இடங்கள்**

- குஜராத் – வல்ஸட்
- மஹாராஷ்டிரா – தானே
- ஹிமாச்சலப் பிரதேசம் – கங்காரா.

⇒ **மலா என்ற சொல் வழங்கப்படும் இடங்கள்**

- பஞ்சாப் – ஜலந்தர்
- ராஜஸ்தான் – அஜ்மீர்
- கர்நாடகம்– உடுப்பி.

⇒ **ஆர். பாலகிருஷ்ணன் இ .ஆ. ப. பற்றிய செய்திகள்:**

- மலைகள் குறித்த ஆய்வு 'டீசுடீடுடீழுலு' எனப்படுகிறது. மலைகள் குறித்த ஆய்வு சிந்துவெளி பண்பாட்டின் திராவிட அடித்தளம் என்ற நூலில் அமைந்துள்ளது. இந்நூலின் ஆசிரியர்–ஆர். பாலகிருஷ்ணன் இ.ஆ.ப. இந்தியவியல் மற்றும் திராவிடவியல் ஆய்வாளரான ஆர்.பாலகிருஷ்ணன் 28 ஆண்டுகளாக இடப்பெயர் ஆய்வில் ஈடுபட்டு வருகிறார்.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- வடமேற்கு இந்தியாவில் இன்றுவரை வழக்கில் உள்ள 'கொற்கை', 'வஞ்சி', 'தொண்டி' வளாகத்தை ஆய்வுலகின் கவனத்திற்கு கொண்டு வந்தவர். தினமணி நாளிதழில் துணியாசிரியராகவும், கணையாழி இலக்கிய இதழின் ஆலோசகர் குழுவிலும், தீவிர பங்காற்றி உள்ளார்.

⇒ **படைப்புகள்:**

- அன்புள்ள அம்மா, சிறகுக்குள் வானம்

⇒ **சிறப்பு:**

- 1984–ல் இந்திய ஆட்சி பணி தேர்வை முதன் முதலாக முழுவதுமாக தமிழிலேயே எழுதி முதல் முயற்சியிலேயே தேர்வு பெற்றவர். தற்போது ஒடிசா மாநிலத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர் பொறுப்பில் உள்ளார்.

⇒ **தாவர வகைப் பெயர்கள்**

**(தமிழரின் சொல் வளம்)**

மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணரின் **'சொல்லாய்வு கட்டுரைகள்'** என்ற நூலில் உள்ள தமிழ் சொல் வளம் எனும் கட்டுரையின் சுருக்கப் பகுதியான தாவர வகை பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

⇒ **ஒரு தாவரத்தின் அடிப்பகுதியை குறிக்கும் சொற்கள்**

| | |
|---|---|
| தாள் | நெல், கேழ்வரகு முதலியவற்றின் அடி |
| தண்டு | கீரை, வாழை முதலியவற்றின் அடி |
| கோல் | நெட்டி. மிளகாய்ச் செடி முதலியவற்றின் அடி |
| தூறு | குத்துச்செடி, புதர் முதலியவற்றின் அடி |
| தட்டு அல்லது தட்டை | கம்பு, சோளம் முதலியவற்றின் அடி |
| கலி | கரும்பின் அடி |
| கலை | மூங்கில் அடி |
| அடி | புலி,வேம்பு முதலியவற்றின் அடி |

- கடையேழு வள்ளல்கள் எழுவருமே மலைப்பகுதிகளின் தலைவர்களாகவே விளங்கியுள்ளனர்.

**'சேயோன் மேய மைவரை உலகம்'**

**– தொல்காப்பியம்**

**"விண் பொரு நெடுவரை குறிஞ்சிக் கிழவ"**

**– திருமுருகாற்றுப்படை**

| **1. கிளைப் பிரிவுகள்** | |
|---|---|
| சுவை | அடி மரத்தினின்று பிரியும் மாபெரும் கிளை |
| கொம்பு (அல்லது) கொப்பு | கவையின் பிரிவு |
| கிளை | கொம்பின் பிரிவு |
| சினை | கிளையின் பிரிவு |
| போத்து | சினையின் பிரிவு |
| குச்சு | போத்தின் பிரிவு |
| இணுக்கு | குச்சியின் பிரிவு |

| **2. காய்ந்த தாவரத்தின் பெயர்கள்** | |
|---|---|
| சுள்ளி | காய்ந்த குச்சி குச்சி |
| விறகு | காய்ந்த சிறு கிளை |
| வெங்கலி | காய்ந்த கலி |
| கட்டை | காய்ந்த கொம்பும் கவையும் அடியும் |



www.tnpscgroup4.in

| 3. இலை வகை | |
|---|---|
| இலை | புலி வேம்பு முதலியவற்றின் இலை |
| தாள் | நெல் புல் முதலியவற்றின் இலை |
| தோகை | சோளம் கரும்பு முதலியவற்றின் இலை |
| ஓலை | தென்னை பழை முதலியவற்றை இலை |
| சண்டு | காய்ந்த தாளும் தோகையும் |
| சருகு | காய்ந்த இலை |

| 4. கொழுந்து வகை | |
|---|---|
| தாவரத்தின் நுனிப்பகுதி கொழுந்து எனப்படும் | |
| துளிர் (அல்லது) தளிர் | நெல், புல் முதலியவற்றின் கொழுந்து |
| மொழி அல்லது கொழுந்து | புலி, வேம்பு முதலியவற்றின் கொழுந்து |
| குருத்து | சோளம், கரும்பு, தென்னை, பனை முதலியவற்றின் கொழுந்து |
| கொழுந்தாடை | கரும்பின் நுனி பகுதி |

| 5. பூவின் நிலைகள் | |
|---|---|
| அரும்பு | பூவின் தோற்ற நிலை |
| போது | பூ விரியத் தொடங்கும் நிலை |
| மலர் அலர் | பூவின் மலர்ந்த நிலை |
| வீ | மரம் செடிகளில் இருந்து கீழே விழுந்த பூவின் நிலை |
| செம்மல் | வாடின பூவின் நிலை |

| 6. பிஞ்சு வகை | |
|---|---|
| பூம்பிஞ்சு | பூவோடு கூடிய இளம் பிஞ்சு |
| பிஞ்சு | இளம் காய் |
| வடு | மாம்பிஞ்சு |
| மூசு | பலாப் பிஞ்சு |
| கவ்வை | எள் பிஞ்சு |
| குரும்பை | தென்னை, பனை முதலியவற்றின் இளம்பிஞ்சு |
| முட்டுக் குரும்பை | சிறுகுரும்பை |
| இளநீர் | முற்றாத தேங்காய் |
| நுழாய் | இளம் பாக்கு |
| கருக்கல் | இளநெல் |
| கச்சல் | வாழைப் பிஞ்சு |

| 7. குலைவகை | |
|---|---|
| கொத்து | அவரைத் துவரை முதலியவற்றின் குலை |
| குலை | கொடி முந்திரி போன்றவற்றின் குலை |
| தாறு | வாழைக் குலை |
| கதிர் | கேழ்வரகு, சோளம் முதலியவற்றின் கதிர் |
| அலகு (அல்லது) குரல் | நெல், திணை முதலியவற்றின் கதிர் |
| சீப்பு | வாழைத்தாற்றின் பகுதி |

| 8. கெட்டுப்போன காய்கனி வகை | |
|---|---|
| சூம்பல் | நுனியின் சுருங்கிய காய் |
| சிவியல் | சுருங்கிய பழம் |
| சொத்தை | புழு பூச்சி அரித்த காய் அல்லது கனி |
| அளியல் | குளுகுளுத்த பழம் |
| அழுகல் | குளுகுளுத்து நாறிய பழம் அல்லது காய் |
| சொண்டு | பதராய்ப் போன மிளகாய் |

www.tnpscgroup4.in

| | |
|---|---|
| கோட்டான் காய் (அல்லது) கூகை காய் | கோட்டான் உட்கார்ந்ததினால் கெட்ட காய் |
| தேரைக்காய் | தேரை அமர்ந்ததினால் கெட்ட காய் |
| அல்லிக் காய் | தேரை அமர்ந்ததினால் கெட்ட தேங்காய் |
| ஒல்லிக்காய் | தென்னையில் கெட்ட காய் |

| **9. பழத்தோல் வகை** | |
|---|---|
| தொலி | மிக மெல்லியது |
| தோல் | திண்ணமானது |
| தோடு | வன்மையானது |
| ஓடு | மிக வன்மையானது |
| குடுக்கை | சுரையின் ஓடு |
| மட்டை | தேங்காய் நெற்றின் மேற்பகுதி |
| உமி | நெல், கம்பு முதலியவற்றின் மூடி |
| கொம்மை | வரகு, கேழ்வரகு முதலியவற்றின் உமி |

| **10. மணி வகை** | |
|---|---|
| கூலம் | நெல், புல், கம்பு முதலிய தானியங்கள் |
| பயறு | அவரை, உழுந்து முதலியவை |
| கடலை | வேர்க்கடலை, கொண்டைக்கடலை முதலியவை |
| விதை | கத்திரி, மிளகாய் முதலியவற்றின் வித்து |
| காழ் | புளி, காஞ்சிரை (நச்சு மரம்) முதலியவற்றின் வித்து |
| முத்து | ஆமணக்கு, வேம்பு முதலியவற்றின் வித்து |
| கொட்டை | மா, பனை முதலியவற்றின் வித்து |
| முதிரை | அவரை, துவரை முதலிய பயறுகள் |

| **11. இளம் பயிர் வகை** | |
|---|---|
| நாற்று | நெல், கத்தரி முதலியவற்றின் இளநிலை |
| கன்று | மா, புளி, வாழை முதலியவற்றின் இளநிலை |
| குருத்து | வாழையின் இளநிலை |
| பிள்ளை | தென்னையின் இளநிலை |
| குட்டி | விளாவின் இளநிலை |
| மடலி அல்லது வடலி | பனையின் இளநிலை |
| பைங்கூழ் | நெல், சோளம் முதலியவற்றின் பசும்பயிர் |

போர்ச்சுகீசு நாட்டின் தலைநகரான லிசுபனில், 1554–ல் கார்டிலா எனும் நூல் முதன்முதலாக தமிழ் மொழியில் தான் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூல் ரோமன் வரி வடிவில் அச்சிடப்பட்டுள்ளது. இந்திய மொழிகளிலேயே மேலைநாட்டு எழுத்துருவில் முதலில் அச்சேறியது தமிழ் மொழியாகும்.

⇒ **<u>கானடை என்ற சொல்லை பிரித்தால் கிடைக்கும் பொருள்கள்</u>**

- கான் அடை – காட்டைச் சேர்
- கான் நடை – காட்டுக்கு நடத்தல்
- கால்நடை – காலால் நடத்தல்

⇒ **<u>சீன நாட்டில் தமிழ் கல்வெட்டு</u>**

- சீன நாட்டில் ‘காண்டன்’ நகருக்கு 500 கல் வடக்கே சூவன் செள என்னும் துறைமுக நகர் உள்ளது. பண்டைய காலத்தில் இது சிறந்த துறைமுகமாக விளங்கிற்று. அந்த காலத்தில் தமிழ் வணிகர்கள் இந்நகருக்கு அடிக்கடி வந்து சென்றுள்ளனர். அதன் காரணமாக சீனாவில் சிவன் கோயில் ஒன்று கட்டப்பட்டது. அது சீன பேரரசரான



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

குப்லாய்கானின் ஆணையில் கீழ் கட்டப்பட்டது, என்பதை குறிக்கும் தமிழ் கல்வெட்டு இன்றும் இக்கோயிலில் உள்ளது. இக்கோயிலில் சோழகால சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

⇒ **காற்றின் பல பெயர்கள்**

- காற்றானது வளி, தென்றல், புயல், சூறாவளி என்று பல பெயர்களால் அழைக்கப்படுகிறது.

⇒ **திசையின் அடிப்படையில் காற்றின் பெயர்கள்**

⇒ **கிழக்கு**

- கிழக்கு என்பது 'குணக்கு' என்று அழைக்கப்படும். கிழக்கிலிருந்து வீசும்போது, கொண்டல் எனப்படுகிறது. இது மலை மேகங்களை சுமந்து வருவதால், மழைக்காற்று என்றும் அழைக்கப்படுகிறது.

⇒ **மேற்கு**

- மேற்கு என்பது குடக்கு என்றும் அழைக்கப்படும். மேற்கிலிருந்து வீசும் போது, கோடை எனப்படுகிறது. வறண்ட நிலப்பகுதியில் இருந்து வீசுவதால், வெப்பக்காற்று என்று அழைக்கப்படுகிறது

⇒ **வடக்கு**

- வடக்கு என்பது 'வாடை' என்று அழைக்கப்படும். வடக்கிலிருந்து வீசும் போது வாடைக்காற்று எனப்படுகிறது. பனிப்பகுதியிலிருந்து வீசுவதால் ஊதைக்காற்று என்றும் அழைக்கப்படுகிறது.

⇒ **தெற்கு**

- தெற்கிலிருந்து வீசும் போது தென்றல் எனப்படுகிறது.

⇒ **இலக்கியத்தில் காற்று**

**1. சிலப்பதிகாரம்**

"வண்டொடு புக்க மணவாய்த் தென்றல்"

பத்மகிரி நாதர் தென்றல் விடு தூது

"நந்தமிழும் தண்பொருநை நன்னதியும் சேர் பொறுப்பிற்

செந்தமிழின் பின்னுதித்த தென்றலே"

**–பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்**

**2. புறநானூறு**

"நளிஇரு முந்நீர் நாவாய் ஓட்டி

வளிதொழில் ஆண்ட உரவோன் மருக!

களிஇயல் யானைக் கரிகால் வளவ!"

**3. ஔவை குறள்**

வாயு வழக்கம் அறிந்து செறிந்த டங்கில்
ஆயுள் பெருக்கம் உண்டாம்.

**'கோட்டை' என்ற இட பெயர்**

| | | |
|---|---|---|
| 1. | தமிழ் | கோட்டை |
| 2. | மலையாளம் | கோட்ட, கோடு |
| 3. | கன்னடம் | கோட்டே கோண்டே |
| 4. | தெலுங்கு | கோட்ட |
| 5. | துளு | கோட்டே |
| 6. | தோடா | க்வாட் |

**'வரை'** என்ற சொல் கோடு, மலை, சிகரம், விளிம்பு, கரை, எல்லை, நுனி போன்ற பொருள்களில் பயன்படுத்தப்படுகிறது.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in